(ஊ) இல்லை.

(எ) இவ்வினா எழ இடமில்லை.

திரு. என். கே. பழனிசாமி : எத்தனை பேர்கள் இதிலே படித்து வருகிறார்கள் ? இதற்காக ஏற்படக்கூடிய செலவை ஹச்.ஆர். அண்ட் சி. போர்டே ஏற்றுக்கொள்கிறதா அல்லது அரசு கொடுக்கிறதா, இது மதுரை கோயிலுக்கு மட்டுந்தானா? மற்ற கோயில்களுக்கும் சேர்த்தா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : சாதாரணமாக இந்தப் பயிற்சி வகுப்பு மத்திய அரசால் சென்னையில் நடத்தப்படுகிறது. மதுரை மீனாட்சி கோயில் மியூஸியத்தின் சார்பில் கடந்த ஆண்டு பயிற்சி கொடுக்கப் பட்டது. முதல்நிலை 36 பயிற்சி வகுப்புகள், இடைநிலை 37 பயிற்சி வகுப்புக்கள், துவக்கநிலை 20 பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டன. இதற் காகக் கட்டணம் 100, 50, 30 முறையே வசூலிக்கப்பட்டது. மேற் கொண்டு செலவு இருந்தால் கோயில் நிதியிலிருந்து கொடுக்கப்படுகிறது என்று கருதுகிறேன். இந்தப் பயிற்சி பெற்றவர்கள் கோயில் முழுநேரப் பணியாளர்களாக சிலரும் பகுதிநேரப் பணியாளர்களாகச் சிலரும் இருக் கிறார்கள். ஏற்கனவே பணியாற்றிவருகிறவர்கள் முறையாகத் தங்கள் பணியை ஆற்றுவதற்கான முறையிலே இந்தப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகின்றன.

RATES FOR ARCHANAS.

*620 Q. Thiru N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state :

(*a*) whether it is a fact that the rates for Archanas in temples under the control of Hindu Religious and Charitable Endowments Department in the State have been increased ; and

(*b*) if so, the reasons therefor ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) இந்து சமய அறநிலைய இலாகாவின் அதிகார வரம்பிற்குட்பட்ட ஆலயங்களில் சிலவற்றில் மட்டும் ஆலய நிர்வாகிகளால் அர்ச்சனைக் கட்டணங்கள் உயர்த்தப்பட்டுள்ளன.

(இ) சம்பந்தப்பட்ட திருக்கோயில்களின் நிர்வாகச் செலவுகள் அதிகரிப்பை ஈடு கட்டவும், திருக்கோயில்களின் நிதி நிலைமையை அபிவிருத்தி செய்வதற்காகவும் அர்ச்சனைக் கட்டண உயர்வு செய்யப் பட்டுள்ளது.

திரு. என். கே. பழனிசாமி : இந்த அர்ச்சனைக் கட்டணம் பழனியிலே ஒரு விதமாகவும் மதுரையிலே ஒருவிதமாகவும் ஒவ்வொரு கோயிலிலும் ஒவ்வொரு விதமாகவும் இருக்கிறதே, ஏழை சாமி, பணக்கார சாமி

சத்யமேவ ஜயதே TRUTH ALONE TRIUMPHS

1975 ஏப்ரல் 9]

என்று வித்தியாசம் ஏதாவது இருக்கிறதா? அர்ச்சனைக் கட்டணத்தை எல்லா இடங்களிலும் சீராக்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: சாமிகளில் பணக்கார சாமி, ஏழை சாமி என்று கிடையாது. வருகின்ற பக்தர்கள் கொடுக்கிற காணிக்கையை பொறுத்துதான் அந்தந்த இடங்களிலே வருமானம் இருந்து வருகிறது. கோயில் பணிகளை சீராக நிறைவேற்றக்கூடிய முறையிலேயும், சமுதாயநலத் திட்டங்களைக் கருத்தில் கொண்டும், நிர்வாகத்தைச் செம்மையாக நடத்துகின்ற நிலைமையைப் பொறுத்தும் கட்டணம் உயர்த்தப்பட்டு இருக்கிறதே தவிர, சாமிகளிலே ஏழை, பணக்காரர் என்ற வித்தியாசம் கிடையாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக் குறி(*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

(முற்பகல் 10-00)

2. நடைமுறைக் கேள்வி

தம்மீது நீதி விசாரணை அறிவிக்கப்பட்டும் பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. ப. உ. சண்முகம் தம் பதவியை இராசினாமா செய்யாதது குறித்து.

திரு. கோவை செழியன்: பாயின்ட் ஆஃப் ஆர்டர் சார். பேரவைத் தலைவரவர்களே, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சரவர்கள் நேற்றைய தினம் இந்த மன்றம் முடிவடைந்ததற்குப் பின் மாலை நேரத்தில் ஒரு அறிவிப்பைச் செய்திருக்கிறார்கள். அதன்படி நேற்று காலையிலே அவர்கள் ஒத்துக்கொண்ட ஒரு நீதி விசாரணைக்கு சென்னை உயர்நீதிமன்றத்திலே இருக்கின்ற ஒரு நீதிபதியின் பெயரைச் சொல்லி, அந்த நீதிபதி விசாரணை செய்வார்கள் என்று அறிவித்திருக்கிறார்கள். ஆனால், அவர்கள் அப்படி அறிவித்ததற்குப் பிறகுகூட மாண்புமிகு அமைச்சர் திரு. ப. உ. சண்முகம் அவர்கள் இந்த மன்றத்திலே இருக்கிறார்கள், ஆகவே, அவர்கள் இராஜினாமா செய்யவில்லை என்று தெரிகிறது. ஏற்கனவே கேரளாவில் கோவிந்த நாயர், தாமஸ் என்ற இரண்டு அமைச்சர்கள் மீது நீதி விசாரணை செய்வது என்று நடவடிக்கை எடுத்தவுடன் அவர்கள் இராஜினாமா செய்து விட்டார்கள். லால் பகதூர் சாஸ்திரி அவர்கள் தாஷ்கண்ட் நகரத்திற்குச் செல்லுவதற்கு முன்னால் டி.டி கே. அவர்கள்மீது "ஃபாரின் எக்சேஞ்ச் ரெகுலேஷன்" சம்பந்தமாக ஒரு சந்தேகம் இருக்கிறது என்று நீதி விசாரணை ஒன்றைப் போட்டார்கள். அதைப் போட்டவுடனே டி.டி. கிருஷ்ணமாச்சாரியார் அவர்கள் அந்த மந்திரி பதவியிலிருந்து இராஜினாமா செய்துவிட்டு, பத்திரிகை நிருபர்களிடத்திலே சொன்னார்கள், அவர்கள் சொன்ன வாசகத்தை நான் இங்கே சொல்லுகிறேன்.